2021 பிப்ரவரி 5] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

[பேரவைத் தலைவர்] [2021 பிப்ரவரி 5

பின்னர், பேரவை பிற்பகல் 2–55 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

---

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

25. மத்திய காசநோய் பிரிவின் உதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் ஓராண்டிற்குள் தேசிய நோய்ப்பரவல் குறித்த ஆய்வுடன் சேர்த்து மாநில அளவிலான நோய்ப்பரவல் குறித்த ஆய்வினையும் மேற்கொள்வதற்கு தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் சேவைகளைப் பயன்படுத்துவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 5–9–2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 332–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

26. எண்ணூர் கழிமுகப் பகுதியிலுள்ள சாம்பல் துகள்களை தாவர வழி மாசு நீக்கத்திற்கான கள வழி மாதிரி ஆய்விற்கான ஒப்பந்த ஆலோசனை சேவைகளை/பணிகளை, பரிந்துரையின் அடிப்படையில் திருவாளர்கள் பிச்சாண்டிகுளம், காடுகள் ஆலோசனை நிறுவனம், ஆரோவில் அவர்களுக்கு ஒப்படைப்பது குறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 29–9–2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 356–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. 2017 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும், ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது